**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.**

Deposition of Witness for : PW-4 Date : 21.03.2024
Case No. : **O.S. 492/2019** Nationality : Indian
Name : ஹேமசந்திரன் (கிராம நிர்வாக அலுலவலர், வேப்பத்தூர்2 கிராமம்) Religion :
Age : 38
Father's/Husband's Name :
Village :
Taluk :

வா.சா.4

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**முதல் விசாரணை :-**

நான் தற்போது திருவிடைமருதுார் தாலுக்கா வேப்பத்தூர் 2 கிராமத்தில் கிராம நிர்வாக அலுலவலராக பணியற்றி வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து எனக்கு சாட்சியம் அளிக்க சம்மன் வந்தது. தாவா சொத்துக்கள் சம்மந்தமாக உயர்நீதிமன்றத்தில் ஒரு விசாரணை நடைபெற்று வந்தது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும் . கும்பகோணம் வருவாய் கோட்டாட்சியர் போட்ட உத்தரவிற்கு எதிராக பிரதிவாதி உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மேல்முறையீட்டில் நடந்த விசாரணை என்றால் உயர்நீதிமன்றத்தில் இருந்து வட்டாட்சியர் அலுவலதகத்திற்கு சம்மன் அனுப்பப்பட்டது அங்கு ஆள் இல்லை என்பதால் நான் உயர்நீதிமன்றத்தில் ஆஜராகி கிராம நிர்வாக அலுவலர் என்று தெரிய படுத்தினேன். உயர்நீதிமன்றத்தில் நான் தாவா சொத்தினை பார்த்துள்ளேனா என்று கேட்டார்கள். நான் இல்லை என்று சொன்னேன். என்னை தாவா சொத்தில் சாகுபடி செய்யப்பட்டு வந்த நெற்பயிரை அறுவடை செய்வதற்கு எவ்வளவு செலவாகும் என்று கேட்டார்கள். நான் சுமார் ரூ.65000/- செலவாகும் என்று சொன்னேன். உயர்நீதிமன்றத்தில்

இருதரப்பினரும் ஆளுக்கு ரூ.35000/- கொடுக்க வேண்டும் என உத்தரவிட்டு என்னை நெற்பயிரை அறுவடை செய்து அதன் மூலமாக வந்த வருமானத்தை இந்நீதிமன்றத்தில் வைப்பீடு செய்து உத்தரவிட்டார்கள். அதன்பேரில் நான் அறுவடை செய்து நீதிமன்றத்தில் பணத்தை வைப்பீடு செய்துள்ளேன்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

தாவா சொத்துக்கள் சம்மந்தமாக உயர்நீதிமன்றத்தில் விசாரணை நடந்த விவரம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் வட்டாட்சியருக்கு வந்த அழைப்பாணையின்பேரில் நான் உயர்நீதிமன்றத்தில் ஆஜரானபோதுதான் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

Sd/- N. Sivapalani,
District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.